# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

## IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, PERAMBALUR.

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | C.C. No.24/2017 |
| preliminary Register | : | |
| Sessions | : | |
| DEPOSITION OF WITNESS for Court | Petitioner Respondent | அ.சா.6 |
| Name | : | திரு.எஸ்.தங்கவேல்,( காவல் ஆய்வாளர், மோகனூர் காவல் நிலையம், நாமக்கல் மாவட்டம்) |
| Father's/Husband Name: | | திரு.செல்லமுத்து |
| Village | : | கரூர் |
| Taluk | : | கரூர் |
| Age | : | 51 /2023 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 21.02.2023.

**முதல் விசாரணை :—**

01. நான் தற்போது காவல் ஆய்வாளராக நாமக்கல் மாவட்டம், மோகனூர் காவல் நிலையத்தில் பணிபுரிந்து வருகிறேன். அரும்பாவூர் காவல் நிலையத்தில் காவல் சிறப்பு உதவி ஆய்வாளராக இருந்த ஆரோக்கியசாமி என்பவர் கடந்த 23.04.2015 ம் தேதி பணியில் இருந்த போது வந்து நிலையம் ஆஜராகி வெங்கடேசன், த/பெ.சுந்தர்ராஜ் என்பவர் அளித்த புகாரின் பேரில் நிலைய குற்ற எண்.120/2015 U/s. 294(b), 506(i) , IPC மற்றும் Sec 4 of TNPCEI Act—ன் கீழ் வழக்கு பதிவு செய்தார்.

02. **(முதல் தகவல் அறிக்கை அ..சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. 23.04.2015 ம் தேதி காலை 14.30 மணிக்கு சம்பவம் இடம் சென்று சாட்சிகள் குமார், தர்மலிங்கம் முன்னிலையில் சம்பவயிடத்தை மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்தார். மேற்படி **(மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** மேலும் சாட்சிகள் வெங்கடேசன், ராமு, அருண்குமார், செல்வரங்கம், ராஜா, குமார, தர்மலிங்கம் ஆகியோரை விசாரித்து தனிதனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

03. அன்றையே தினமே மதியம் 15.15 மணிக்கு வழக்கின் எதிரி கவிதா க/பெ.

ராஜேந்திரன் என்பவரை அவரின் வீட்டின் முன்பு வைத்து கைது செய்து அவரிடம் இருந்து சாட்சிகள் குமார், தர்மலிங்கம் முன்னிலையில் இரண்டு புரோநோட்டுகளை மகஜரில் கைப்பற்றியுள்ளார். பின்பு நிலையம் கொண்டுவந்து திரேக பரிசோதனை செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

04. படிவம் 91ன் மூலம் இரண்டு புரோநோட்டுகளை நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்துள்ளார். 24.04.2015ம் தேதி இவ்வழக்கு கோப்பை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சாட்சிகள் வெங்கடேசன், ராமு, அருண்குமார், ஆகியோரை விசாரணை செய்து மறு வாக்குமூலம் பதிவு செய்தேன். செல்வரங்கம், ராஜா, குமார், தர்மலிங்கம் ஆகியோரை விசாரணை செய்த போது உதவி ஆய்வாளர் ஆரோக்கியசாமியிடம் கூறியதையே என்னிடம் கூறியததால் நான் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. பின்னர் புலன் விசாரணை முடித்து நீதிமன்றத்தில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :-**

01. ஆபாசமான வார்த்தை என்ன வார்த்தை என்று புகாரிலும், முதல் தகவல் அறிக்கையிலும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அ.சா.1 எந்த தேதியல் பணம் கடன் வாங்கினார் என்று தேதியை புகாரிலும், முதல் தகவல் அறிக்கையிலும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

02. 5 வட்டி, 10 வட்டி, மாதம் எவ்வளவு ரூபாய் வட்டியாக அ.சா.1 கொடுத்துள்ளார் என்று புகாரிலும், போலீஸ் விசாரணையிலும் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். மிரட்டியதால் நான் பயந்து விட்டேன் புகாரிலும், போலீஸ் விசாரணையிலும் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். சம்பவயிட சாட்சிகளை விசாரணை செய்துள்ளேனா என்றால் அவர்கள் வாக்குமூலம் கொடுக்க முன்வராததால் விசாரிக்கவில்லை.

03. சட்டப்படி சாட்சிகளை விசாரிக்க எனக்கு அதிகாரம் உண்டு யாரும் சாட்சியம் அளிக்க முன்வர முடியாது என்று சொல்ல முடியாது. சம்பவம் உண்மை இல்லை என்பதால் சாட்சிகள் இல்லை என்றால் சரியல்ல. கைப்பற்றபட்ட புரோநோட்டுகளில் தேதி, மாதம், வருடம், கொடுத்தவர், வாங்கியவர் பெயர்கள் சாட்சிகள் கையொப்பங்கள் மற்றும் எவ்வளவு பணம் போன்றவை எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

04. நான் சொல்வதுபோல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும், அவ்வாறு நடந்திருந்தால் புரோநோட்டுகளில் வாங்கியவர் கொடுத்தவர் பெயர்கள் இருந்திருக்கும் என்றாலும் சரியல்ல. Sec 4 of TNPCEI Act–ன் படி 5 வட்டி, 10 வட்டி வசூலித்தற்கான ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். புகார்தாரர், நேரில் பார்த்த சாட்சிகளை தவிர மற்ற சாட்சிகளை மறுவிசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல.